(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) இல்லை.

Co-operative Fruit Processing Industry in North Arcot District

*249.Q— THIRU L.BALARAMAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(a) the amount collected as shares in the Co-operative Fruit Processing Industry in North Arcot District;

(b) the capital investment in this Industry;

(c) whether this Industry is remunerative; and

(d) the reasons for non-distribution of Share Certificates, if any?

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள, கூட்டுறவுத் துறையின் மூலம் இயங்கும் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை

திரு. எல். பலராமன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுத் துறையின் மூலம் இயங்கும் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலைக்காக வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை எவ்வளவு?

(இ) இதற்கான மூலதனம் எவ்வளவு?

(உ) தற்போது இத்தொழிற்சாலை லாபகரமாக நடக்கின்றதா?

(எ) பங்குச் சான்று ஏதும் வழங்காமல் இருப்பின் அதன் காரணம் யாது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) பங்குத் தொகைக்காக அங்கத்தினர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 1,31,797. பங்குத் தொகைக்காக அரசாங்கம் அளித்துள்ள தொகை ரூ. 5 இலட்சம்.

(இ) தொழிலகத்தை நிறுவ மொத்தம் செலவான தொகை ரூ. 22 இலட்சம்.

(உ) இல்லை.

(எ) பழம் பதனிடும் தொழிலகத்தைத் தனிக் கூட்டுறவுச் சங்கமாக அமைக்கும் நோக்கத்தோடு விவசாயிகளிடமிருந்து பங்கு பணம் வசூல் செய்யப்பட்டது. ஆனால் தொழிலகத்தின் தற்போதைய நிலைமையை பரிசீலனை செய்து அதைத் தனிச் சங்கமாகப் பதிவு செய்யும் திட்டத்தைச் சில ஆண்டு களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டது. வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கத்தின் தற்போதைய உபவிதிகளின்படி தனிப்பட்ட நபர்களை 'A' வகுப்பு உறுப்பினர்களாக சேர்க்க இயலாது. பழம் பதனிடும் தொழிலகத்தை தனிக் கூட்டுறவுச் சங்கமாக அமைக்கும்வரை அவர்கள் அந்த சங்கத்தில் 'B' வகுப்பு உறுப்பினர்களாகச் சேர்க்கலாமா என்ற ஒரு குறிப்பு கூட்டுறவுப் பதிவாளரின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, ரூபாய் 22 லட்சத்திற்கு மேலே முதல் போட்டு இதை ஆரம்பித்து நான்கைந்து ஆண்டுகளாகியும், இதுவரையிலும் அதிலே பங்குகளைப் போட்ட அங்கத்தினர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படாமலிருக்கின்றது. இதை உடனடியாக வழங்குவதற்கு உத்தரவிடப் படுமா? மேலும் இப்படி ரூ. 22 லட்சம் என்ற அளவிற்கு முதலீட்டைப் போட்டும் இலாபம் கிடைக்காதது ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். அதனுடைய விற்பனையில் இப்போதுதான் சற்று முன்னேற்றம் காணப்படுகிறது. ஆரம்ப கட்டத்தில் விற்பனை ரூ. 8,000 என்று இருந்தது 1972–73-ல்தான் ரூ. 11,23,000 என்ற அளவிற்கு உயர்ந்திருக்கின்றது. குறைந்தது ரூ. 20 லட்சம் என்ற அளவில் விற்பனையானால்தான் கணிசமான லாபம் கிடைக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். அதே நேரத்திலே சேர்ந்துள்ள உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள முடியாததற்குக் காரணம், விதிப்படி 'எ' வகுப்பில் சேருவதற்கான விதி முறை இல்லாத காரணத்தினால் பதனிடும் தொழிற் சாலையில் மட்டும் தனியாக பிரிவு 'எ'-ல் சேர்க்க வேண்டியிருக்கிறது. இப்போது 'பி' உறுப்பினர்களாக அவர்களைச் சேர்த்துக்கொள்ளுவதற்கான ஏற்பாடு நடந்துகொண்டிருக்கின்றது.

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, இப்படிக் கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை, மதுரை, கொடைக்கானல், திண்டுக்கல் பகுதிகளில் அதிக பழ உற்பத்தி யாவதால், அங்கே இதை விரிவுபடுத்தும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

1974 மார்ச் 29]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அங்கெல்லாம் உற்பத்தியாகும் திராட்சையைப் பயன்படுத்தி ஒயின் தயாரிக்கும் திட்டம் இருந்துகொண்டிருக்கிறது. அதைப் பொறுத்த வரையில் மத்திய கூட்டுறவு ஸ்தாபனத்திலிருந்து உத்தரவு ஏதும் வரவில்லை. இப்போது நான்கு ஆண்டு களுக்குப் பிறகுதான் நமது நாட்டிலேயே இப்படி பழச்சாற்றை உபயோகிக்கும் பழக்கம் பரவி வருகின்றது. அது நல்லபடி முன்னேற்றமடைந்தால்தான், இதை விரிவுபடுத்தும் யோசனையை நாம் மேற்கொள்ள முடியும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்தப் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலையில் என்னென்ன பழங்களை உபயோகித்து வருகின்றார்கள்? மேலும் டெக்னீஷியன்ஸை முறையாக பணியில் ஈடுபடுத்தாத காரணத்தினால், நூற்றுக்கணக்கான டன் சாறு பாழாகிவிட்டது என்பது உண்மையா? இப்படி வீணாவதைத் தடுக்க மேல் நடவடிக்கைகள் என்று என்னென்ன அரசு எடுக்க இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, முதல் கட்டத்திலே இப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டாலும், அடுத்தடுத்து இது திறமையுடன் இயங்க ஆரம்பித்து, இப்போது இதன் உற்பத்திப் பண்டங்களை வெளிநாட்டினரும் விரும்பி வாங்கக்கூடிய அளவிற்கு அபிவிருத்தி ஏற்பட்டிருக் கின்றது. இதை பிற மாநிலங்களிலும் இப்போது விரும்பி வாங்குகின்றார்கள். நல்ல சாறு இப்போது தயாரிக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

Price of Rice

* 250 *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it was decided to raise the price of rice at the Chief Ministers' Conference held at New Delhi in September 1973 ; and

(*b*) if so, the action taken by the Tamil Nadu Government thereon?